மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; அவையில் நடந்தவைகள் எல்லாம் இருக்கின்றன. வெறும் கோஷங்கள் மட்டும் நீக்கப்பெறுகின்றன. அவையில் இருந்து வெளியேற்றப் பட்ட இரண்டு உறுப்பினர்கள் மட்டும் இன்றைக்கு அவையின் இதர நடவடிக்கைகளில் வந்து கலந்து கொள்ள முடியாது.

4. கவன ஈர்ப்பு.

லாட்டரி முகவர்கள் தமிழக அரசின் லாட்டரிச் சீட்டை புறக்கணிப்பது.

திரு. இரா. தாமரைகனி: தலைவர் அவர்களே, ''தமிழ் நாட்டில் குறிப்பாக சென்னை போன்ற நகரங்களில் உள்ள லாட்டரி முகவர்கள் தமிழக அரசின் லாட்டரிச் சீட்டைப் புறக்கணிப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ் நாட்டில் பிற மாநில பரிசுச் சீட்டுகள் பெருமளவில் விற்பனையாகி வருகிறது. இந்தியாவிலேயே தமிழகம் தான் பரிசுச் சீட்டுகளுக்கு வியாபார சந்தையாக நிலவுகிறது. பிறமாநில பரிசுச்சீட்டுகளின் விற்பனையை கட்டுப்படுத்த பரிசுச் சீட்டுகளின் மீது 20 விழுக்காடு ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்பட்டது. இது நமது மாநில பரிசுச் சீட்டுக்கும் பொருந்தும். எனவே முகவர்களுக்கு அளிக்கப்படும் கமிஷன் தொகையான 16 விழுக்காடு மற்றும் விற்பனை வரி, மேல் வரி (surcharge) இவைகளைச் சேர்த்து நமது பரிசுச் சீட்டின் அடக்க விலை ஒரு ரூபாய்க்கு மேல் போகிறது. இதனால் முகவர்கள் நமது பரிசுச் சீட்டுகளை வாங்க முன்வருவதில்லை.

இந்த நிலையை போக்க முகவர்களுக்கு அரசு நிர்ணயித்த கமிஷன் அவர்களுக்கு முழு அளவில் கிடைக்கவும், பரிசுச் சீட்டின் மீது விதிக்கப்பட்ட விற்பனை வரியின் சுமை பரிசுச் சீட்டுகளை வாங்கும் பொது மக்களுக்கு செல்லாமல் இருக்கவும் ஒரு பரிசுச் சீட்டினை ஏற்கனவே உள்ள 1 ரூபாய்க்கே விற்பதற்கும் கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநில லாட்டரி சீட்டுகள் அதிக அளவில் நமது மாநிலத்தில் விற்பனையாகின்றன. நமது மாநில பரிசுச் சீட்டுகள் அவ்வளவாக விற்கப்படுவது இல்லை என்பதற்குக் காரணம் என்ன என்பது ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அது மட்டுமல்லாமல், நமது மாநில பரிசுச் சீட்டுகள் அவ்வளவாக

1984 மார்ச் 16] (திரு. இரா. தாமரைக்கனி)

கவர்ச்சியாக அச்சடிக்கப்படுவது இல்லை. ஆகவே பலவிதமான வண்ணங்களில் அந்த பரிசுச் சீட்டை அச்சடிப்பதற்கு தனியார் அச்சகங்களில் வசதிகள் இருப்பதால், அந்த முறையில் அச்சடிக்கப் படுமா? லாட்டரி சீட்டின் விலையையும் அதிகரிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநில பரிசு சீட்டுகளோடு போட்டா போட்டி போட்டுக் கொண்டு சமாளிக்கும் அளவிற்கு தமிழக பரிசுச் சீட்டையும் சிறப்பான முறையில் வைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று ஏற்கனவே இந்த அவையில் தெரிவித்து இருக்கிறேன். அதிலே ஒன்று, பரிசுச்சீட்டுகளைக் கவர்ச்சி கரமாக ஆக்கவேண்டும் என்பதாகும். இப்போது இருக்கும் அரசு அச்சகத்தில் கவர்ச்சியாக அச்சடிக்க இயலாது 5 வண்ணங்களில் அச்சடிக்க தனியார் அச்சகத்தில், ஒப்பந்த அடிப்படையில், தக்க பாதுகாப்பான முறையில் செய்யலாமா என்று அரசு யோசித்து வருகிறது. பிற மாநில பரிசு சீட்டுகள் எந்த அளவிற்கு பரிசுத் தொகைகளைத் தருகிறார்களோ அந்த அளவிற்கு ஈடுகட்டத்தக்க அளவிற்கு பரிசுத் தொகை கொடுப்பது, சிறப்பு பரிசு தருவது என்று பல வேறு பிரச்னைகள் அரசின் ஆய்வில் இருக்கின்றன. அதைப் பற்றி விரைவில் அரசு தக்க முடிவு எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த பரிசுத் தொகை 1 கோடி என்றும், பரிசு விழுந்தவர் உலக நாடுகளில் முழுவதும் சுற்றுப் பயணம் செய்யலாம் என்றும் அரசு திட்டம் வகுக்குமா? அது மட்டுமல்லாமல் அரசு ஊழியர்கள் கண்டிப்பாக எல்லோரும் மாதந்தோறும் இரண்டு பரிசு சீட்டுகள் வாங்கவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர் களே, இந்த பரிசுச்சீட்டு விற்பனையைப் பொறுத்தவரையில் நாம் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. பரிசுச்சீட்டுகளை கவர்ச்சிகரமாக அச்சிட்டு வழங்க நாம் ஏற்பாடு செய்யலாம். நம்முடைய மாநில பரிசுச்சீட்டுகளை மக்கள் வாங்குவதன் மூலம் கிடைக்கின்ற பணம் நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தப் படுகிறது என்பதை உணர்ந்து மக்கள் இதிலே ஆர்வம் காட்டலாம். மக்கள் நம்முடைய பரிசுச்சீட்டுகளை விரும்பி வாங்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதுபற்றி அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்லால் பிற மாநில பரிசுச்சீட்டுகளோடு போட்டிபோட்டு, சமாளித்து விற்கக்கூடிய அளவுக்கு என்ன என்ன செய்யலாம் என்பதை அரசு ஆராய்ந்து அந்த வகையிலே தேவையான முயற்சிகளை அரசு மேற் கொள்ளும்.

128-6-7